

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்து, ஆலையை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்து, அந்நிறுவனத்தின் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

### ஓசூரில் – முதலீட்டாளர்கள் மாநாட்டில்

# ரூ.24,307 கோடி மதிப்பீட்டில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## 49,353 நபர்களுக்கு வேலை வாய்ப்பு– முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

**ஓசூர், செப்.12-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் ஓசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 23,303.15 கோடி ரூபாய் முதலீட்டில், 44,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 1003.85 கோடி ரூபாய் முதலீட்டில் 4,483 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆக மொத்தம், ரூ. 24,307 கோடி முதலீட்டில் 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.**

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 3 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்து, 1210 கோடி ரூபாய் முதலீட்டில் 7900 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 4 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அத்துடன், நான்கு நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

**ஓசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள் பற்றிய குறிப்பு**

Aspire Footwear Private Limited அரவிந்த் குழுமத்தின் துணை நிறுவனமான Aspire Footwear Private Limited, வேலூர் மாவட்டம், சிப்காட் காட்பாடி தொழில் பூங்காவில், 350 கோடி ரூபாய் முதலீட்டில் 6000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், தோல் அல்லாத காலணிகள் உற்பத்தி திட்டத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டினார்.

Zetwork நிறுவனம் Zetwork நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீட்டில் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், சோலார் செல்கள் உற்பத்தி திட்டத்தை தொடங்க முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றையதினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம், சூரிய எரிசக்தி துறையில், துணை நிறுவனங்களை ஊக்குவித்து, அதன் மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்துவதோடு, பசுமை ஆற்றல் ஏற்றுமதியை நன்கு அதிகரித்திடும்.

DCX Systems Limited, IAIELTA Systems உடன் இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய உற்பத்தி திட்டம் அமைக்க உள்ளது. இத்திட்டத்தில், 850 கோடி ரூபாய் முதலீட்டில் 165 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், வான்படை, கடற்படை மற்றும் தரைப்படை பயன்பாட்டிற்கான மேம்படுத்தப்பட்ட ரேடார் மற்றும் மின்னணு போர் அமைப்புகளை வடிவமைத்து உற்பத்தி மேற்கொள்ளப்படும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றையதினம் மேற்கொள்ளப்பட்டது.

International Aerospace Manufacturing Pvt Ltd. (IAMPL) நிறுவனம், ஓசூர் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இயங்கிவரும் தனது வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தி நிலையத்தை விரிவாக்கம் செய்ய உள்ளது. 200 கோடி ரூபாய் முதலீட்டில் 69 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில், துல்லிய உபகரணங்கள் உற்பத்தித் திட்டத்தை விரிவாக்கம் செய்திட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றையதினம் மேற்கொள்ளப்பட்டது.

சிப்காட் வருங்கால நகர்திறன் பூங்கா சிப்காட் நிறுவனம், 210 கோடி ரூபாய் மதிப்பில், 300 ஏக்கர் பரப்பளவில் ஒரு வருங்கால நகர்திறன் பூங்காவை அமைத்துள்ளது. இந்த நகர்திறன் பூங்காவில் இதுவரை 22 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 2728 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 6682 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்க உள்ளது. இந்த வருங்கால நகர்திறன் பூங்கா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டது.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 23,303.15 கோடி ரூபாய் முதலீட்டில், 44,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில் 1003.85 கோடி ரூபாய் முதலீட்டில் 4,483 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில், 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,100 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில் 3 திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

அதன் விவரங்கள்:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | இடம் | முதலீடு ரூ. கோடியில் | வேலை வாய்ப்பு | உற்பத்தித் துறை |
|---|---|---|---|---|---|
| 1 | Kaynes Circuits | போச்சம் பள்ளி | 200 | 300 | மின்னணு வியல் |
| 2 | SIPCOT - Shoolagiri Future Mobility Park | சூளகிரி | -- | -- | தொழிற் பூங்கா |
| 3 | SNS Clothing (Gokaldas Exports) | ஆம்பூர் | 50 | 800 | தோல் அல்லாத காலணிகள் |

**அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் விவரங்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் 1,210 கோடி ரூபாய் முதலீட்டில் 7,900 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும்வகையில் 4 புதியதிட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் விவரங்கள்:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | இடம் | முதலீடு ரூ. கோடியில் | வேலை வாய்ப்பு | உற்பத்தித் துறை |
|---|---|---|---|---|---|
| 1 | Kauvery Hospitals | ஓசூர் | 500 | 1500 | மருத்துவமனை |
| 2 | RICO | சூளகிரி | 260 | 200 | மோட்டார் மற்றும் மின் வாகன உதிரி பாகங்கள் |
| 3 | Aspire Footwear | காட்பாடி | 350 | 6000 | தோல் அல்லாத காலணிகள் |
| 4 | Versatile Bonds | பனப் பாக்கம் | 100 | 200 | காலணிப் பசைகள் |

**பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

TEPL, Kaynes, Mando மற்றும் First Steps Babywear ஆகிய நான்கு தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு இன்னோவேஷன் பிளாட்ஃபார்ம் - அறிமுகம் (Tamil Nadu Innovation Platform - Launch)

வழிகாட்டி நிறுவனம் மற்றும் YNOS வென்ச்சர் இன்ஜின் இணைந்து தமிழ்நாடு இன்னோவேஷன் பிளாட்ஃபார்ம் ஒன்றை தொடங்கியுள்ளது, இது மாநிலம் முழுவதும் மாவட்ட வாரியாக உள்ள புத்தொழில் நிறுவனங்கள், இன்குபேட்டர்கள், மற்றும் முதலீட்டாளர்கள் குறித்த தரவுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியாகும். இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகப் படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. கோபிநாத், ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஒய். பிரகாஷ், டி. ராமச்சந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ். சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், தொழில் நிறுவனங்க ளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஓசூர் சிப்காட் குருபரப்பள்ளி தொழிற் பூங்காவில் – டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில்

# ரூ.450 கோடி முதலீட்டில் 2 புதிய விரிவாக்கத் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, செப்.12-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.09.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25-ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமி;ழ நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

**டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்**

தைவான் நாட்டைச் சேர்ந்த டெல்டா குழுமம் மின்சார மற்றும் எரிசக்தி மேலாண்மை தீர்வுகள் மற்றும் அதிநவீன மின்னணுப் பொருட்கள் உற்பத்தி ஆகிய துறைகளில், உலகின் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது. ஓசூரில் உள்ள இக்குழுமத்தின் துணை நிறுவனம் - டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், எரிசக்தி விநியோகம், DC விசிறிகள் மற்றும் SwitchMode எரிசக்தி விநியோக பொருட்களை உற்பத்தி செய்து, உள்நாட்டில் விற்பனையும், வெளிநாட்டிற்கு ஏற்றுமதியும் செய்து வருகின்றது.

டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் இரண்டு புதிய விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் புதிய மேம்பட்ட உற்பத்தி வரிசை விரிவாக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஒய். பிரகாஷ், டி. ராமச்சந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறு வனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ்குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத் தின் தலைவர் ஜேம்ஸ் என்ஜி, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பங்கேற்க விரும்புவோர் விண்ணப்பித்து பயன்பெறலாம்

# கட்டணமில்லா இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, செப். 12 -*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலி லிருந்து காசி அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு தமிழ்நாட்டிலுள்ள 20 மண்டலங்களிலிருந்து 600 பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட வுள்ளனர். இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதி வாய்ந்த பக்தர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.*

*இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 60 வயது முதல் 70 வயதிற்குட் பட்ட பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்க ளுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில் களுக்கும், அறுபடை வீடுக ளுக்கும், இராமேசுவரத்தி லிருந்து காசிக்கும் கட்டண*



*மில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். மேலும் மானசரோவர் மற்றும் முக்திநாத் போன்ற புனித தலங்களுக்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியமும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆன்மிகப் பயணங்களின் மூலம் இதுவரை 7,998 பக்தர்கள் பயன்பெற்றுள்ளனர்.*

*அதன் தொடர்ச்சியாக, 2025-2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை சட்டமன்ற அறிவிப்பினை நிறை வேற்றிடும் வகையில், இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலி ருந்து காசி அருள்மிகு விசுவநாத சுவாமி திருக்கோயி லுக்கு இவ்வாண்டு ரூ.1.50 கோடி அரசு நிதியில் 600 பக்தர்கள் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.*

*இந்து சமய அறநிலையத் துறையின் 20 இணை ஆணையர் மண்டலங்களி லிருந்து மண்டலத்திற்கு 30 பக்தர்கள் வீதம் 600 நபர்களை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகிறது. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும், 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2,00,000/க்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்றும், போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவ சான்றுடன், ஆதார் நகல் இணைக்கப்பட வேண்டும்.*

*இந்த ஆன்மிகப் பயணத் திற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் 22.10.2025க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.*

*இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணம் தொடர்பான விவரங் களுக்கு துறையின் இணையதளத்திலோ அல்லது 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம். ஆகவே, இந்த ஆன்மிகப் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதியுடைய பக்தர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் .*

*இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*